**வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு முழு அளவிலான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமங்களை/அனுமதிகளை வழங்குவதற்கான திட்டம்**

**2022.09.23 ஆம் திகதி வரை தொலைபேசி அழைப்புகள் மூலம் பெறப்பட்ட பொது மக்களின் கருத்துகள்/ஆலோசனைகள் மற்றும் அதற்கான ஆலோசனைகளும்/பதில்களும்.**

| தொ.இல. | கருத்துகள் / ஆலோசனைகள் | தெரிவிக்கப்பட்டுள்ள பதில்கள் |
|---|---|---|
| 1 | இரட்டைப் பிரசாவுரிமை கொண்டவர்கள் இந்த உரிமத் திட்டத்தைப் பெறுவதற்குத் தகுதியுடைய வர்களா? | ஆம். |
| 2 | இலங்கையர் ஒருவர், வெளிநாட்டில் கம்பனி யொன்றை தாபித்திருந்தால் மற்றும் அத்தகைய முயற்சியில் பணிப்பாளராக இருந்தால் அல்லது சுயதொழில் செய்கின்ற ஒருவராக இருந்தால், அப்போது, இந்த உரிமத் திட்டத்திற்கு அவர் தகுதியுடையரா? | அத்தகைய இலங்கையரொருவர், அத்தகைய சட்டரீதியான தொழில் மூலம் இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியை அனுப்பியிருந்தால், அவர் இந்த உரிமத் திட்டத்திற்கு தகுதியுடையவர். |
| 3 | இலங்கையர் ஒருவர், அனுப்பிய வெளிநாட்டுப் பணம் முழுவதையும் இலங்கை ரூபாவுக்கு ரூபாவுக்கு மாற்றியிருந்தால், அப்போது இந்த உரிமத் திட்டத்திற்கு அவர் தகுதியுடையரா? | ஆம்.<br><br>அத்தகைய சந்தர்ப்பத்தில் வாகன மொன்றை இறக்குமதி செய்வதற்கு அனுப்பிய தகுதியுள்ள 50% தொகையை அமெரிக்க டொலருக்கு மாற்றுவதற்கு வங்கி உதவி புரியும். |
| 4 | அனுமதிக்கு விண்ணப்பிக்கின்றபோது, விண்ணப்பதாரி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட வாறான குறைந்தபட்ச தொகையை தனது கணக்கில் வைத்திருத்தல் வேண்டும். எதிர்காலத்தில் பணம் அனுப்பும் வாய்ப்பின் அடிப்படையில் நடைமுறைக் கணக்கு நிலுவையை விட அதிக மதிப்புள்ள வாகனத்தை இறக்குமதி செய்வதற்கான உரிமத்தப் பெற்றுக்கொள்ள முடியுமா? | முடியாது<br><br>இறக்குமதி செய்யப்படவுள்ள வாகனத்தின் CIF பெறுமதியின் இரட்டிப்பு தொகையை அனுப்பிய பின்னரே உரிமம் வழங்கப்படும். |
| 5 | சாதாரண சேமிப்புக் கணக்கிற்கு பணம் அனுப்பப் பட்டுள்ளது. இது தகுதியானதா? | ஆம்.<br><br>வழக்கமான சேமிப்புக் கணக்கு மட்டுமின்றி, விசேட வைப்புக் கணக்குகளும்.<br>வங்கியிடமிருந்து பகுத்தாராய்ந்ததன் பேரில் MoneyGram, Western Union போன்ற அத்தகைய மாற்றல்களும் இத்திட்டத்திற்கு தகுதியானவை. |

| | | |
|---|---|---|
| 6 | அமெரிக்க டொலர்களில் / டொலர்களில் அனுப்பப்படுதல் வேண்டும் என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய வெளிநாட்டு நாணயங்கள் செல்லுபடியாகாதா? | செல்லுபடியாகும். வங்கியின் உறுதிப்படுத்தல் ஆவணத்திலுள்ள ஏனைய வெளிநாட்டு நாணயங்களை வங்கி டொலர்களுக்கு மாற்றும். |
| 7 | ஏனைய வெளிநாட்டு நாணயங்கள், பணம் அனுப்புகின்ற நாளின் அல்லது வங்கி உறுதிப்படுத்தல் வழங்கப்படுகின்ற திகதியின் அடிப்படையிலா அமெரிக்க டொலருக்கு மாற்றப்படுகின்றது. | பணம் அனுப்பிய திகதியின் மாற்று விகிதத்தின் அடிப்படையில் |
| 8 | இலங்கை வாகன இறக்குமதியாளர் அசோசியே சனுடன் கலந்துரையாடி இத்திட்டத்திற்கு அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது சிறப்பானதாகும் | அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. |
| 9 | உரிமங்களுக்கான விண்ணப்பங்களை யாரிடம் கையளித்தல் வேண்டும்? இது பற்றிய சரியான வழிகாட்டல் சுற்றறிக்கையில் காணப்பட வில்லை. | விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரியில் நேரடியாக கையளிக்க முடியும் அல்லது தபாலில் அனுப்ப முடியும்.<br><br>செயலாளர்,<br>தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு,<br>07 ஆவது மாடி,<br>“மெஹேவர பியெச”<br>கொழும்பு 05. |
| 10 | உரிமம் / அனுமதி வழங்குவதற்கு கட்டணம் அறவிடப்படுகின்றதா? | இல்லை. |
| 11 | உரிமம் வழங்குவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் ? | ஆவணங்களின் தொகுதி பூரணமான தென்றால் இரண்டு வாரங்களுக்குள் வழங்கப்படும். |
| 12 | இந்த சுற்றறிக்கைகள் மற்றும் தகவல்கள், வெளிநாட்டுப் பணியாளர்களால் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்ற இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதா? | சுற்றறிக்கை மற்றும் அது தொடர்பான தகவல்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ளன. |
| 13 | வெளிநாட்டுப் பணியாளர்கள் அதிகளவில் வருகை தருகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புப் | ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| | பணியகத்தில் இந்த விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏன் ஏற்பாடு செய்யப்பட வில்லை ? | |
| 14 | இவற்றை விமான நிலையத்தின் குடிவரவு பிரிவில் விளம்பரப்படுத்துதல் / ஊக்குவித்தல் மற்றும் அங்கே விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்தல் சிறந்தது. | இந்த ஏற்பாட்டுக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| 15 | உரிமம் / அனுமதி வழங்கப்படுவதற்கு முன்பு, குறைந்த மதிப்புள்ள உரிமத்திற்காக விண்ணப்பித்த விண்ணப்பப்படிவத்தை அதிக மதிப்புள்ள வாகனத்திற்கு மாற்ற முடியுமா? | ஆம்.<br><br>அத்தகைய சந்தர்ப்பத்தில் முதல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட்டு, இரண்டாவது விண்ணப்பப்படிவம் கவனத்தில்கொள்ளப்படும். |
| 16 | மேலே இல. 15 இற்கு மேலதிகமாக, உரிமம் வழங்கப்பட்டதன் பின்னர் அத்தகைய மாற்றமொன்றினை மேற்கொள்ள முடியுமா? | அத்தகைய விண்ணப்பப்படிவமொன்று முன்னைய உரிமங்களுடனான அனைத்து நகல்களுடன் சுற்றறிக்கை யில் விதித்துரைக்கப்பட்ட காலத்திற் குள் சமர்ப்பிக்கப்பட்டால், அது கவனத்தில் கொள்ளப்படும் |
| 17 | புலம்பெயர் விண்ணப்பதாரி அவர் சார்பாக விண்ணப்ப செயல்முறையை மேற்கொள்வதற்கு அவரால் என்ன சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்? | அற்றோனித் தத்துவம் |
| 18 | மோட்டார் வாகனங்களை கவனத்தில் கொள்வதற்கான காலப்பகுதியை 2023.04.30 வரை நீடிப்பது சாத்தியமானதா ? | முன்னோடித் திட்டமாக இந்தக் காலப்பகுதி மாற்றப்படமாட்டாது. முன்னோடித் திட்டத்தின் பின்னர் நீடிப்புகள் பற்றி கவனத்தில் கொள்ளப்படும். |
| 19 | சுற்றறிக்கையிலுள்ள HS குறியீடுகளுக்கு வரியின் சதவீதங்களை சேர்ப்பதற்கு சாத்தியமுள்ளதா? | இந்தத் தகவல்கள் விண்ணப்பதாரிகள் பார்வையிடுவதற்காக இணையத் தளத்தில் வெளியிடப்படுகின்றன. |
| 20 | வரவுக் கடிதங்களுக்கு (LC) விண்ணப்பிக்கின்ற போது இந்த சுற்றறிக்கையோ அல்லது அது தொடர்பான வழிகாட்டல்களோ அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று வங்கிகள் தெரிவிக் கின்றன. | தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| 21 | வரவுக் கடித்தைத் (LC) திறக்காது நேரடியாக வாகனத்தை இறக்குமதி செய்யமுடியாதா? | இல்லை. |
| 22 | உரிமத்தைக் கொண்டிருப்பவர், உரிமத்தின் / அனுமதியின் பெறுமதியை விட அதிக தொகைப் பணத்தை அனுப்பியிருந்தால், உரிமத்தின் / அனுமதியின் பெறுமதியை விட அதிக பெறுமதி யிலான வாகனத்தை இறக்குமதி செய்ய முடியுமா? | ஆம்.<br><br>விண்ணப்பதாரி இரத்து செய்வதற் கான அனைத்துப் பிரதிகளுடன் முன்னைய உரிமம் மற்றும் வங்கியால் வழங்கப்பட்ட பணம் அனுப்பியதற்கான 100% உறுதிப் படுத்தலுடன் சுற்றறிக்கையில் விதித் துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 23 | ஓய்வு பெறுகின்ற அல்லது வேலை அனுமதி களை முடித்துக்கொள்கின்ற புலம்பெயர் வேலை யாட்கள் இந்த உரிமத் திட்டத்திற்கு விண்ணப் பிக்க முடியுமா? | ஆம்.<br><br>அத்தகைய விண்ணப்பதாரிகள் சுற்றறிக்கையின் ஏனைய தேவைப் பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| 24 | மேல் இல.23 இல் குறிப்பிடப்பட்டுள்ள காரணத்திற்காக இலங்கை வந்துள்ள விண்ணப்ப தாரி ஒருவர் இந்த உரிமத்திற்கு / அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியுமா? | இல்லை. |
| 25 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அதிகளவு பணத்தை அனுப்பிய புலம்பெயர் வேலையாட்கள் இத்திட்டத்தினால் பாதிக்கப்படுகின்றனர். இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பது சிறந்தது. | தெரிவிக்கப்பட்ட காலப்பகுதி மட்டுமே கவனத்தில்கொள்ளப்படும். |
| 26 | புலம்பெயர் வேலையாளர் ஒருவர், ஒரு உரிமத்திற்கு / அனுமதிக்கு மேல் விண்ணப்பிக்க முடியுமா?<br><br>உ.ம் :- ஒரு கார் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள்<br><br>இரண்டு கார்கள்<br><br>இரண்டு மோட்டார் சைக்கிள்கள் | இல்லை. |
| 27 | வரவுக் கடிதத்தைத் (LC) திறக்கும் போது, உள்ளூர் முகவர் வங்கி மற்றும் விண்ணப்பதாரி பணம் அனுப்பிய வங்கி ஆகியன வேறுபட்டால், செயல்முறை மற்றும் பணப் பரிமாற்ற நடைமுறை பற்றி தயவுசெய்து விளக்குங்கள். | ஒவ்வொரு விண்ணப்பதாரியும் அவர் பணத்தை அனுப்பிய வங்கி மூலம் வரவுக் கடிதங்களை திறத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 28 | அத்தகைய பயனாளியின் பெயரில் புலம்பெயர் வேலையாளர் வாகன உரிமத்தை / அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியுமா? | இல்லை.<br><br>புலம்பெயர் வேலையாளரின் பெயரில் மாத்திரமே உரிமம் / அனுமதி வழங்கப்படும். |
| 29 | புலம்பெயர் வேலையாளர் ஒருவரால் அனுப் பப்பட்ட முழுத் தொகையும் ரூபாவாக மாற்றப்பட்டு, முழுத் தொகையும் வங்கியில் இருந்து திரும்பப் பெறப்பட்டுவிட்டது. அத்தகைய நிலையில், வாகனத்தை இறக்குமதி செய்வதற்கு 50% பரிமாற்ற வசதியை பயனாளிக்கு வழங்குவதற்கு வங்கியால் கடன் வசதி வழங்க முடியுமா? | புலம்பெயர் வேலையாளருக்கு ஒரு ரூபாய் கடன் வழங்குவது தொடர் பிலும் வங்கி அதன் கடன் கொள்கை யின் அடிப்படையில் அத்தகைய கடன் வசதியொன்றை முடிவு செய்தல் வேண்டும். |
| 30 | வெளிநாட்டில் வேலைவாய்ப்பை முடித்துவிட்டு தற்போது இலங்கையில் இருக்கின்ற, ஆனால் அந்த வெளிநாடுகளில் கணக்குகளை வைத்திருக் கின்ற புலம்பெயர் வேலையாளர் ஒருவர், இந்த உரிமத் / அனுமதித் திட்டத்தின் பயனாளிகளாக இருக்க முடியுமா? | இல்லை. |